# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 23/நகராட்சி/2017**
**நாள் : 09/09/2019**

**திரு M. இராஜசேகரன்,**
**27/8, கிழக்குத் தெரு,**
**பொத்தனூர் – 638181.**
**நாமக்கல் மாவட்டம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி, நாமக்கல்.**

– **எதிர் மனுதாரர்**

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர், கிழக்குத் தெரு, கதவு எண். 27/8ல் வசிக்கும் திரு மா. இராஜசேகரன் என்பவரது 02.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்திற்கு 06.02.2017 அன்று வரப்பெற்று முறையீட்டு மனு எண்.23/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனு குறித்தான உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கைகள் பெறப்பட்டு உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன :-

முறையீட்டு மனுதாரரது மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவில், நாமக்கல் கோட்டை சாலையில் பாலாஜி மருத்துவமனை எனும் மருத்துவமனை பல ஆண்டுகளாக இயங்கி வருவதாகவும், மேற்படி மருத்துவமனைக்கு பொதுக்கட்டிடம் என்ற வகையில் உரிய அனுமதி / உரிமம் பெறப்பட்டிருக்க வேண்டுமெனவும் அவ்வாறான அனுமதி / உரிமம் மேற்படி மருத்துவமனைக்கு பெறப்படவில்லை என்ற விவரம் தன்னால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சேலம் மண்டல நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் மற்றும் நாமக்கல் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி அலுவலகங்களிலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடித நகல்களை இணைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவ்வாறான கடித நகல்கள் ஏதும் இணைத்து வரப்பெறவில்லை. மேலும், மேற்படி மருத்துவமனை கட்டிடத்திற்கு விதிகளின்படி முறையாக அனுமதி பெறப்படவில்லை என்றும் அவ்வாறிருப்பினும் விதிகளுக்கு முரணாக மேற்படி கட்டிடத்திற்கு கதவிலக்க எண் நகராட்சியால் வழங்கப்பட்டு, மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி மருத்துவமனை கட்டிடத்தை சீலிடவும் விதிகளுக்கு முரணாக செயல்பட்ட நகராட்சி ஆணையாளர் மீது துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆணையிடுமாறும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இந்நேர்வில், நாமக்கல் நகராட்சி ஆணையாளரது அறிக்கை ந.க. எண்.1466/2017/எப்1, நாள் 16.02.2017, 20.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் நாமக்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு-C பிளாக் 4–ல் நகரளவை எண்.233/3ல் 398.0 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தில் நாமக்கல் வட்டம், நாமக்கல் டவுன், தில்லைபுரத்தைச் சேர்ந்த

டாக்டர் திருமொழி, க/பெ டாக்டர் கண்ணப்பன் என்பவருக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.1680/04–ன் படி ஏலக்கிரயம் மூலம் பாத்தியப்பட்டுள்ளதெனவும், பட்டா எண்.1703–லிருந்து மேற்படி T.S.No.233/3 தனியாக பிரிக்கப்பட்டு புதிய பட்டா எண்ணில் நாமக்கல் வட்டாட்சியரின் ப.மா. 2776/6II/05–16 (பி.8) நாள் 09.03.2006–ல் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் தடை செய்யப்பட்ட பகுதியில் அமைவதால் திருமதி திருமொழி என்பவரின் கட்டிட விண்ணப்ப எண்.52/2007/ஜி, நாள்01.06.2007–ல் அப்போதைய நாமக்கல் நகராட்சி ஆணையாளரால் மேற்படி விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்க இயலாதென அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு 12.04.2006 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டு நாளது தேதி வரை நிலுவையின்றி மனுதாரரால் செலுத்தப்பட்டு வருவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேலும், மனுதாரரது புகார் மனு மற்றும் அதன் மீதான இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளுக்குப் பின்னர் புகாருக்குட்பட்ட மருத்துவமனை கட்டிடத்தை தல ஆய்வு செய்து உரிமையாளருக்கு நகராட்சி ஆணையாளரால் 14.02.2017 நாளிட்ட அறிவிப்பு ஒன்று வழங்கப்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து மனுதாரரது 15.02.2017 நாளிட்ட கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பம் வரப்பெற்றதாகவும், நகராட்சி மூலம் அனுமதி வழங்க வழிவகை இல்லையென்பதால் மேற்படி கட்டிட அனுமதி விண்ணப்பத்தினை சேலம் மண்டல, நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கு 16.02.2017 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மருத்துவமனை மற்றும் குடியிருப்பாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருவதாகவும் முறையீட்டு மனுதாரர் திரு மா. இராஜசேகரன் என்பவர் இதுநாள் வரையிலும் நகராட்சி அலுவலகத்திற்கு எவ்வித புகார் மனுவும் தாக்கல் செய்யவில்லை எனவும் நாமக்கல் நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. 28.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் புகாருக்குட்பட்ட பாலாஜி மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டுவதற்கு எந்த அனுமதியும் பெறப்படவில்லை என்றும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு நகராட்சியால் வரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரியும் தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். 10.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான நாமக்கல் நகராட்சி ஆணையாளர் திரு ந. கமலநாதன், தான் நகராட்சி ஆணையாளராக கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும் புகாருக்குட்பட்ட மருத்துவமனைக்கான 01.06.2007 நாளிட்ட கட்டிட அனுமதி விண்ணப்பம் நகராட்சியால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும் அதை மீறி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 01.06.2007 முதல் வரி விதிப்பு செய்யப்பட்டு வரி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்து தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

5. அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற நாமக்கல் நகராட்சி ஆணையாளரது ந.க.எண்.1466/2017 எப்.1, நாள் 06.06.2019 அறிக்கையில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட விவரங்களே மீண்டும் குறிப்பிடப்பட்டு புகாருக்குட்பட்ட பாலாஜி மருத்துமனை கட்டிடத்திற்கான வரி விதிப்புகள் 2018–19 வரை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. விதிகளுக்கு முரணாக கட்டிட அனுமதியற்ற கட்டப்பட்ட கட்டிடம் குறித்தான சட்டப்படியான நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்கள் ஏதும் அறிக்கையில் இடம்பெறவில்லை. இந்நிலை சுட்டிக்காட்டப்பட்டதுடன், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.14650/2019–ல் வழங்கிய 28.05.2019 நாளிட்ட ஆணை குறித்தும் கட்டிட வரன்முறை குறித்தான அரசாணை நிலை எண்.111, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD 4(3) துறை, நாள் 22.06.2017 அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளும் சுட்டிக்காட்டப்பட்டு நாமக்கல் நகராட்சி ஆணையாளருக்கு அனுமதியற்ற கட்டிடம் மீதான சட்ட / விதிகளின்படியான நடவடிக்கைகள் குறித்து விளக்கங்கள் கோரி 14.06.2019 நாளிட்ட அறிவிப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், புகாருக்குட்பட்ட அனுமதியற்ற கட்டிடத்தின் இடம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை கட்டுப்பாட்டு பகுதியிலிருப்பினும், மேற்படி அனுமதியற்ற கட்டிடத்திற்கு நகராட்சியால் சொத்துவரி மற்றும் பிற வரியினங்கள் நிர்ணயிக்கப்பட்டு

வசூலிக்கப்படும் நிலையிலும், கட்டிட உரிமையாளரது கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநருக்கு பரிந்துரைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையிலும் மேற்படி அனுமதியற்ற கட்டிடம் மீதான சட்ட / விதிகளின்படியான நடவடிக்கைகள் எடுக்கத் தவறியமைக்கான விளக்கங்கள், அடிப்படை ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறும் நகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது.

6. அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற நாமக்கல் நகராட்சி ஆணையாளரது அறிக்கை ந.க. எண்.1466/17/எப்.1, நாள் 24.06.2019-ல் புகாருக்குட்பட்ட மருத்துவமனைக்கு 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 216 (1) (2) மற்றும் 317-வது பிரிவின் கீழ் உரிய அறிவிப்பு நகராட்சியால் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

7. மேற்கண்ட விவரங்களின்படி முறையீட்டு மனுதாரரது புகார் மனு மற்றும் இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளுக்கு பின்னரே, அனுமதியற்ற கட்டிடத்தின் மீதான சட்டப்படியான நடவடிக்கைகள் நகராட்சியால் எடுக்கப்பட்டுள்ளது நன்கு புலனாகிறது. நாமக்கல் நகராட்சி ஆணையாளரது மேற்படி அறிக்கை பதிவு செய்யப்படுவதுடன், சட்ட / விதிகளின்படியான நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படவும், உறுதி செய்யப்படவும் வேண்டுமென வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், இந்நேர்வில், 2007-ல் கட்டிட அனுமதி மறுக்கப்பட்ட கட்டிடத்திற்கு சொத்துவரி ஏற்படுத்தி, 23.06.2019 வரை புகாருக்குட்பட்ட அனுமதியற்ற பொதுக் கட்டிடம் மீது எந்தவொரு சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்காமல் காலம் கடத்தியமை மற்றும் கடமை தவறியமைக்கு, சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய துறைவாரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 - ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 9- ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு M. இராஜசேகரன்,**
   **27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர் – 638181.**
   **நாமக்கல் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **நாமக்கல் நகராட்சி, நாமக்கல்.**

3. **நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,**
   **நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,**
   **சேலம்.**

4. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **நகராட்சி நிர்வாக ஆணையரகம்,**
   **சாந்தோம், சென்னை .28.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி